www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

19 08 99

எண்ணம் 10 கிண்ணம் 8



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தெய்வம் பலபல சொல்லிப் பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்"
-மகாகவி.சுப்பிரமணியபாரதி-

அன்புச் சிறுவர் சிறுமியரே!

இம்முறை இதழ்கள் தாமதமாகத் தருவதில் வேதனை உண்டு. கடமைகளைச் சரியாகச் செய்வதற்கு எமக்கும் ஆசை உண்டு. எவ்வளவு முயன்ற போதிலும் தடைகள் வருவது இதழ்களைச் சரிவரச் செய்யாமல் தாமதமடையச் செய்கிறது. தாமதமானாலும் இதழ்கள் உங்கள் கைகளுக்குத் தராமல் இருந்ததில்லை.

"சிறுவர் அமுதம்" இதழுக்கான ஆக்கங்கள் எழுதுபவர்கள், போட்டிகளில் பங்கு பற்றுபவர்கள் குறைந்து வருவது என்று சொல்ல முடியாது, குறைந்து விட்டது வேதனைக்குரிய விடயம் தான். "சிறுவர் அமுதம்" தொடங்கிய காலங்களில் தமிழ்ப் புத்தகங்கள், குறிப்பாகத் தமிழ் வானொலிகள் இல்லாத காலம். தமிழ் படிக்கும் ஆர்வமுள்ளவர்கள் விரும்பி ஏற்றார்கள். ஆதரவளித்தார்கள்.

உதவி அளித்த செஞ்சிலுவைச் சங்கம், "எவாங்கீலிஸ்" அமைப்பு, இரண்டின் நிதி உதவியும், ஒழுங்கான முறையில் கிடைத்த சந்தாப்பணமும், இவைகளால் புத்தகத்தைச் சரியாகச் செய்ய முடிந்தது. சமீப காலமாகச் சேவை செய்யும்

www.tamilarangam.net

இந்நிறுவனங்களும் நிதிப் பற்றாக்குறை காரணமாக உதவியைக் குறைத்துக் கொண்டன. இதை உங்களுக்குத் தெரிவித்து உங்களின் உதவியைக் கோரியிருந்தோம். உதவி கிடைக்கவில்லை.

இரு அமைப்புக்களின் நிதியைச் சுரண்டி நாங்கள் புத்தகத்தைத் தருவது சரியானதல்ல, அதை நாங்கள் விரும்பவுமில்லை. உலகமெங்கும் புனிதமான சேவைகளைச் செய்து வரும் இந்நிறுவனங்களை கஷ்டப்படுத்தி எங்கள் இலட்சியத்தை வெல்வதற்கு நாங்கள் விரும்பவில்லை.

எனவே இந்த வருடம் முடியும்வரை இதழ்கள் தொடரும். பின் ஆண்டுக்கு ஒரு மலராக இந் நிறுவனங்களினூடாகவே வெளிவரும் என்பதனை முன் கூட்டியே அறியத் தருகின்றோம்.

## போட்டிகளில் பங்கு பற்றியவர்கள்.

1.அபிராமி பரமேஸ்வரன். DENMARK
2.சுமணா சதாசிவம் SEELSCHEIL
3.ஷந்தியா இரவீந்திரராஜா SOLINGEN
4.கிரிசாந் மனோரஞ்சிதராஜா MÜNSTER
5.ஜெயசாந் மனோரஞ்சிதராஜா MÜNSTER
7.ஜெயானந்தன் கண்ணன் BERG. GLADBACH

www.tamilarangam.net

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

## முடிவு:

வ-இ:
ஒற்றுமை, ஆடு, பாணி, பந்தம், தம், சேலை, ரதி, திகை, வளம், தகளி, களி, திம்பு, புலை, மாணிக்கம், கம், கம்பி, வளி, மஞ்சம், தகவு, பலா, சித்து, கோடு, தேர், சிரசு, சமா, மாதவி, தவி, வாசு, சுவடு, வடு, வாசம், கரை, தாசு.

இ-வ:
தணி, பாடு, ஆமை, லகு, குதி, திட்டி, பலி, கைதி, கோசலை, சேவல், வல், பாளி, தனம், மாலை, பரவு, கதவு, தயிர், தேடு, வசு, வாவி, சுதா, தாரை, கன்னன்.

மே-கீ:
ஒலி, வதி, திறவு, திற, கோல், பவளம், வளம், தடு, சேம்பு, புளி, தேசம், தலை, மான், ஆம், சதமா, கணி, பதவி, தவி, பாட்டாளி, சிவா, பல, பலகை, துட்டு, சிரசு, சுரை, தகுதி, ரசி.

கீ-மே:
வால், வல், வல்லி, விடு, தவம், வம், களி, மார், மாலை, தமை, தசம், கோடி, கோடிடு, வாசி, பாரதி, திணி, வசு, சம்பா, பாதி, திகு, சுடு, தும்பி, தும்பிக்கை.

ஓரெழுத்துச் சொற்கள்:
மை, ஆ, பா, சே, கோ, கை, மா, வா, தா, சே.

www.tamilarangam.net

# நகைத்திருட்டு



வறுமையில் வாழ்ந்தாலும், அன்னத்திற்கு அந்தக் கிராமத்தில் தனி மதிப்பு இருந்தது. கல்யாண வீடுகளிலும், கொண்டாட்டங்களிலும் அன்னத்தின் கை படாத பட்சணங்களோ, உணவுப் பதார்த்தங்களோ இல்லை என்றே கூறலாம். அதிலும் குறிப்பிட்ட வீடுகளில் அவள் உரிமை சொந்தக்காரர்களை விடவும் கூடுதலானது. அவர்களுக்குள்ளும் கணேசன் வீட்டிலும், செல்வரத்தினம் வீட்டிலும் கொண்டாட்டங்கள் என்றால் அவளுக்குத் தன் வீட்டுக் கொண்டாட்டங்கள் போலத் தான்.

www.tamilarangam.net

அதற்கு முக்கிய காரணம் கணேசனின் மனைவி மாலதியும், செல்வரத்தினத்தின் மனைவி தர்மவதியும் அன்னமும் சிறுவயதிலிருந்து ஒன்றாகப் பழகிய சினேகிதிகள். மூன்று குடும்பங்களும் தாய் பிள்ளை போலப் பழகி வந்தவர்கள். இதன் காரணமாக அந்த மூன்று வீடுகளிலும் என்ன கொண்டாட்டமானாலும் மூன்று குடும்பங்களும் கலந்து கொள்ளுவார்கள். இது அங்கு வாழ்ந்த உறவினர் சிலருக்குப் பிடிக்கவில்லை. அதுவும் தங்களுக்கு அந்த வீட்டில் கிடைக்காத செல்வாக்கு வறுமை வாழ்வு வாழும் அன்னத்திற்குக் கிடைத்தது அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்கியது.

எப்படியாவது அன்னத்திற்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். அதற்கான தருணத்தையும் அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். செல்வரத்தினத்தின் மூத்த மகளுக்குத் திருமண நாள் நெருங்கி வந்தது. மணப் பெண்ணுக்கான நகைகள் நகை வியாபாரி கொண்டு வந்திருந்தார். திருமண சமயமானதால் வேறு சிலரும் உதவிக்காக வந்திருந்தார்கள். அன்னமும் அங்கு இருந்தாள். நகைகளை அவளும் வாங்கிப் பார்த்தாள்.

வேலைகளின் அவசரத்தில் தர்மவதி அன்னத்திடம் அலுமாரிச் சாவியைக் கொடுத்து, நகைகளை வைத்து விடும்படி சொல்லிச் சென்று விட்டாள். நகைகளை அலுமாரியில் வைத்து

www.tamilarangam.net

அலுமாரியைப் பூட்டக் கஷ்டமாக இருந்ததால், அருகில் நின்ற தர்மவதியின் உறவினரான சுந்தரத்திடம் அலுமாரியைப் பூட்டிச் சாவியைத் தர்மவதியிடம் கொடுக்கும்படி கூறி விட்ட அன்னம் தன் வீட்டுக்குப் போய் விட்டாள். அடுத்தநாள் அன்னம் செல்வரத்தினத்தின் வீட்டுக்கு வந்தாள். வீடே சோகமயமாகக் காட்சியளித்தது.

வீட்டில் நகைகளில் சில திருடப்பட்டிருந்தன. அன்னம் நகைகளை அலுமாரியில் வைத்ததன் பின், யாரும் அலுமாரியைத் திறக்கவில்லை என்பதும் தெரிந்தது. அன்னத்தின் வறுமைநிலையால் திருடியிருக்கலாம் என்று பலரும் கதைக்கத் தொடங்கினார்கள். விசாரிக்க வந்த பொலீசாரோ அன்னத்தின் வீட்டைச் சோதனையிட வேண்டும் என்றனர். தர்மவதியும் செல்வரத்தினமும் மறுத்த போதிலும் அன்னத்தின் வீடு சோதனையிடப்பட்டது. ஆனால் அங்கு எதுவுமே கிடைக்கவில்லை.

ஆனாலும் அன்னத்தைச் சிலர் சந்தேகமாகப் பார்த்துக் கொண்டனர். களவு போன நகைகளுக்காக அந்த நகைகள் மீண்டும் வாங்கப் பட்டன. அன்னம் மீண்டும் அந்த வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தாள். திருமண தினத்துக்கு முதல்நாள் இரவு அன்னம் மணப்பெண்ணான சுமதியின் கைகளில் திருட்டு நகைகளை ஒப்படைத்தாள். சுந்தரத்தின் மனைவி நகைகளைத் தன்னிடம் தந்ததாகவும் சொன்னாள்.

www.tamilarangam.net

பின் சுமதியிடம், "இதைப் பெரிது படுத்தாதே!. ஏதோ பொறாமையால் சுந்தரம் களவு செய்து விட்டான். நகைதான் கிடைத்து விட்டதே! அவன் உன் தந்தையின் சகோதரன். விஷயத்தைச் சொல்லி மானங் கெடுக்காதே!" என்றாள். இதைக் கேட்டுக் கொண்டு செல்வரத்தினம் நின்றார். செல்வரத்தினத்தை இருவருமே கவனிக்கவில்லை. அவர்கள் கதைத்து முடிந்ததும், செல்வரத்தினம் அவர்கள் அருகில் வந்தார். "என் உடன் பிறந்தவன் எனக்குச் சகோதரன் இல்லை. நீயே என் உடன் பிறந்தவள்." என்று செல்வரத்தினம் அன்னத்தைப் பாராட்டினார்.

மற்றவர்களின் பொருளைத் திருடினால் தான் திருட்டு அல்ல. மற்றவர்களின் சுதந்திரத்தைத் திருடுவதும் திருட்டுத்தான்.

-அலெக்ஸ்சாண்டர் ஹில்-


சிக்கல் தான் சாதனைகளையும் பெரிய வெற்றிகளையும் உருவாக்குகின்றன.

-ஜோன். கென்னடி-

என் அறியாமையைத் தவிர நான் வேறெதையும் அறியவில்லை.

-சோக்கிரதீஸ்-

www.tamilarangam.net



## பரீட்சை

வகுப்பறை மிகவும் அமைதியாக இருந்தது. இதுவரை வகுப்பறை அமைதியாக இருந்ததில்லை. பூகோள ஆசிரியர் கூண்டுக்குள் இருக்கும் புலியைப் போல அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தார். இன்று வகுப்புக்குக் கல்வி அதிகாரி மாணவர்களின் தரத்தை அறிவதற்காகக் கல்லூரிக்கு வர இருக்கிறார். அதனால் எல்லாஆசிரியர்களும் மாணவர்களும் ஏன்?........ அதிபரும் கூடத்தான் பதட்டத்துடன் காணப்படுகின்றார்கள்.

கல்வி அதிகாரி வந்து இறங்கினார். அவருக்குத் தடல்புடலாக வரவேற்பளித்தார்கள். முதல்முதலாக பூகோளபாடம் நடக்கும் வகுப்பறைக்குள்ளேயே நுழைந்தார். பதட்டத்துடன் எழுந்து நின்று மாணவர்கள் வரவேற்றார்கள். பூகோள பாடம் நடந்து கொண்டிருந்த படியால், கல்வி அதிகாரியும் பூகோளபாடத்திலேயே கேள்வி கேட்க விரும்பினார். ஒரு மாணவனைப் பார்த்து, "நாம் பூமியில் வாழுகின்றோம். பூமியின் வடிவம் எப்படி இருக்கும் என்று கேட்டார்.

விடை மாணவனுக்குத் தெரியும். ஆனாலும் பதட்டத்தினால் கேள்விக்கான விடை சொல்லாமல்

www.tamilarangam.net

விழித்தான். ஆசிரியருக்கோ அவமானமாக இருந்தது. அவனுக்குத் தந்திரமாக விடையை அறிவிப்பதற்காகத் தன் உருண்டை வடிவமுடைய மூக்குப்பொடி டப்பாவை அவனுக்குக் காட்டினார். அவன் பதட்ட நிலையிலேயே பதிலைச் சொன்னான். "பூமி உருண்டை வடிவாக இருக்கும். சில நாட்களில் சதுர வடிவமாகவும் இருக்கும்" என்றான்.

வகுப்பில் இருந்த எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். மாணவனோ "திருதிரு"வென்று விழித்தான். பின் அவனும் சிரித்தான். ஏனெனில் அவன் பதட்டத்தில் கல்வி அதிகாரி கேட்ட கேள்வியையே மறந்து விட்டான். ஆசிரியரிடம் இரண்டு பொடி டப்பாக்கள் இருந்தன. ஒன்று சதுர வடிவமானது. இரண்டு பொடி டப்பாகளையும் மாறிமாறி அசிரியர் கொண்டு வருவது வழக்கம். அந்த நினைவிலேயே பதிலையும் அவன் சொல்லி விட்டான்.

படித்து ரசித்ததை எழுதியனுப்பியவர்:
பாமினி அருள்வரதன்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் சிறப்பான பகுதி உண்டு. அது பெருமை கௌரவம் பார்க்காமல் அவன் அன்போடும் கருணையோடும் செய்கின்ற சில செயல்கள் தான்.

-வில்லியம் வோர்ட்ஸ்வெல்த்-

www.tamilarangam.net

# வாழ்க்கை

அந்தத் தெருவில் இரண்டு பக்கங்களிலும், சிறியதும், பெரியதுமான வீடுகள் காணப்பட்டன. செல்வர்கள், நடுத்தர வர்க்கத்தினர், மண் குடிசை வாசிகள் எனப் பலதரப் பட்டவர்கள் வாழ்ந்து வந்தனர். நடுவே, பெரிய மாளிகை போன்ற வீடு. அதன் நேர் எதிரே ஒரு மண்வீடு. பெரிய வீட்டுக்காரரான ஏகாம்பரத்துக்கு இது கொஞ்சம் வேதனைதான். தன் வீட்டின் அழகு குறைவாகத் தெரிகிறது என்று. அதற்கென்ன செய்வது? மண்வீட்டுக்காரரை ஒன்றுமே செய்ய முடியாது.

மண்வீட்டுக்காரரான சோமு தன் சொந்த நிலத்தில் வாழ்பவர். அவரை ஏகாம்பரத்தால் ஒன்றுமே செய்ய முடியாது. அதை ஏகாம்பரமே தன் நண்பர்களிடம் கூறுவதை லக்கி கேட்டிருக்கிறான். லக்கி ஏகாம்பரத்தின் செல்லப்பிள்ளை. அவருடன் காரில்



www.tamilarangam.net

ஜாலியான பிரயாணம் செய்து விட்டு இப்பொழுது தான் வீட்டுக்கு வந்தான். வந்து இறங்கியதும், வாமதி மடியில் தூக்கி வைத்திருக்கிறாள். வாமதி ஏகாம்பரத்தின் ஒரே மகள்.

அவள் பிடியினின்றும் வெளியேறிய லக்கி வாசலுக்கு வந்தான். எதிர் வீட்டு டியூக்கும் வாசலில் கம்பீரமாக நிற்கிறான். அவனைப் பார்த்ததும் லக்கி பெருமூச்சு விட்டது. "அவனுக்கு என்ன! எப்போ பார்த்தாலும் வெளியே சுதந்திரமாக இருக்கிறான். வருவோர் போவோரிடம் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறான். கை குலுக்கிக் கொள்கிறான். பஸ்ஸுக்குச் செல்லும் பிள்ளைகளுடன் அவன் விளையாடுகிறான். அவர்கள் அவனுக்கென்றே பிஸ்கிற், பாண் எல்லாம் கொடுக்கிறார்கள். அவன் இப்போதும் அதற்காகத் தான் காத்திருக்கின்றான்.

அவனுக்கு இருக்கும் சுதந்திரத்தில் சிறிதளவாவது எனக்கு இருக்கிறதா? குறிப்பிட்ட நேரத்தில் சாப்பாடு. குளித்து விட்டு, வாசனைத் தைலமெல்லாம் உடம்பில் தேய்த்து விட்டு, குறிப்பிட்ட நேரத்தில் நித்திரை, பிறகு காரில் பிரயாணம். சில வேளைகளில் வாமதியை கல்லூரியில் இருந்து அழைத்து வரக் காரில் செல்வது! இதைச் சுதந்திரம் என்று எப்படிச் சொல்ல முடியும்?" சலித்துக் கொண்டான் லக்கி.

www.tamilarangam.net

அதோ பிள்ளைகள் பஸ்ஸில் இருந்து இறங்கிப் பிள்ளைகள் வருகிறாள். அவர்களை நோக்கி டியூக் ஓடுகிறான். அவனுக்கு என்ன! எல்லோருக்கும் செல்லப்பிள்ளை. அவர்களோடு ஓடி விளையாடிக் கொண்டு வருகிறான்." சிந்தனையைத் தடை செய்தது வாமதியின் குரல். லக்கி ஓடோடிச் செல்கிறான். வாமதியின் உடையைப் பார்த்தபோது அவள் வெளியே உலவுவதற்கு புறப்படுகிறாள் என்பது தெரிகின்றது.

"லக்கி, வாடா வெளியிலை நடந்து போட்டு வருவோம்" வாமதி அழைத்ததும் லக்கியும் கூடவே நடந்து தெருவில் இறங்கி நடக்கையில் டியூக் பிள்ளைகளோடு ஓடி வருகிறான். அவனோடு சினேகமாய் ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே எதுவும் பேசாமல் வாமதியோடு சென்றான் லக்கி. திரும்பி வரும்போது வானத்தைப் பார்த்த வாமதி "லக்கி, மழை வரும் போலிருக்கு!. கெதியா வாடா". லக்கியும் விரைவாக அவளின் பின்னே வருகிறான்.

அப்படியிருந்தும் மழையின் தூறல் பட்டு லேசாக இருவருமே நனைந்து விட்டார்கள். வீட்டுக்குள் வந்ததும் தன்னைக் கூடக் கவனிக்காமல் லக்கியின் உடம்பைத் துடைத்து விடுகிறாள். பின்பு தான் தன்னைத் துடைக்கிறாள் வாமதி. திரும்பவும், வாசலுக்கே வந்து தெருவைப் பார்த்தான் லக்கி. மெல்லிய தூறல் பெரிய மழையாயிற்று. தெருவில் டியூக் மழைக்குப் பயந்து வீட்டுக்குள் ஓடுகிறான்.

www.tamilarangam.net

உடனேயே திரும்பி வெளியே வந்து மழைக்குள் நனைகிறான்.

சோமுவின் மனைவி "உள்ளே வராதே. சீ, நாயே! வீடு நனைந்து விடும்." டியூக் கொட்டும் மழையில் நனைகிறான். லக்கிக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

-பாமினி அருள்வரதன்.-

# வேட்டைக் கழுகு



பழைய கதைகளில் செய்திகளை அறிவிப்பதற்காகப் புறா, அன்னம் போன்ற பறவைகளைப் பயன்படுத்தியதை அறிந்திருக்கிறோம். அன்னத்தைப் பற்றி விரிவாகத் தெரியவில்லை. ஆனாலும் மத்திய காலத்தில் புறாக்கள் போர்ச் செய்திகளை, உளவுச் செய்திகளை, இராணுவச் செய்திகளைக் கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டதாக அறிய

www.tamilarangam.net

முடிகின்றது.

ஆனால் இறைச்சியை உணவாகக் கொண்டு வாழும் கழுகுகளும் மனிதர்களுக்கு உதவிப் பணியில் ஈடுபட்டிருந்தன. இது இப்போதும் நடைபெற்று வருகின்றது என்பது ஆச்சரியத்துக்குரிய விஷயம் தான். ஆமாம். சவுதிஅரேபியா, குவைத், ஈரான் போன்ற மத்திய கிழக்காசிய நாடுகளில் இன்றும் இவை வழக்கத்தில் இருக்கின்றன.

வேட்டைக்காரர்கள் கழுகுக்குஞ்சுகளைப் பிடித்துப் பழக்கிக் கொள்கிறார்கள். வேட்டையாடச் செல்லும் வேளையில், தம்முடனே இக்கழுகுகளையும் கொண்டு செல்கிறார்கள். வானத்தில் பறவைகள் வாத்து, கொக்கு, புறா போன்றன வானத்தில் வரும்வேளையில், எசமானர்களான வேட்டைக்காரர்கள், சீட்டி ஒலியால் சைகை கொடுக்கிறார்கள். எசமானின் கையிலிருக்கும் கழுகுகள் பறந்து செல்கின்றன. குறிப்பிட்ட பறவையைப் பிடித்து வந்து எசமானிடம் ஒப்படைத்து விடுகின்றன விசுவாசமான இக்கழுகுகள்.

இப்போது இக்கழுகுகளின் விலைமதிப்பு அதிகம். ஏனெனில் இந்தக் கழுகுகளைப் பயன்படுத்த, இவற்றைப் பயிற்றுவதற்கு நிறையச் செலவு செய்கிறார்கள். இக்கழுகுகளின் காலில் கயிற்றைக் கட்டிக் கொண்டே வேட்டையாடப் பழக்குகிறார்கள். இக்கழுகுகளுக்கு உணவு கொடுப்பது மிகவும்

www.tamilarangam.net

சிரமமான வேலையாகும். சரியான அளவு உண
வேண்டும். உணவு சிறிதளவு குறைந்தாலு
கழுகுகள் வலுவிழந்து விடுகின்றன.

உணவு கூடி விட்டாலோ சோம்பலாகி விடும்
மேலே எழுந்து பறக்க முடியாது. கழுகுகள்
இறைச்சியை வேட்டையாடி உண்டாலும்
பயிற்றுவிக்கப்பட்ட இந்தக் கழுகுகள் தன்னா
கைப்பற்றப்பட்ட இறைச்சியை உண்பதில்லை
அதுவும் பயிற்சியோடு சேர்ந்ததாகும். வேட இ
நாய்களை விடவும் இந்தக் கழுகுகள் திறமையா
உழைக்கின்றன.

தற்காலத்தில் கழுகுகளின் திறமையை
பார்ப்பதற்காக வேட்டைப் போட்டிகளையே
நடத்துகிறார்கள். திறமையாக வேட்டையாடு
கழுகுக்குப் பரிசும் கொடுக்கிறார்கள்.

சக்தி கூடுதலாக இருக்கலாம். ஆனால் ஓடுவ
நிதானமாகவே இருக்க வேண்டும்.
-பர்மியப் பழமொழி-

என் குறைகளைத் தெரிந்து கொண்டு நாே
உள்ளூரச் சிரித்துக் கொள்ளும் போது என
மனச்சுமை குறைகின்றது.
-இரவீந்திரநாத்தாகூர்-

www.tamilarangam.net

# சில நொடிகள்

1. வறுக்காத வறை என்ன வறை?
2. நீர் இல்லாமல் வரும் ஆவி என்ன?
3. வயிற்றிலே வராத பசி என்ன பசி?
4. பழுக்காத பழம் என்ன பழம்?
5. அழைக்கும் எழுத்து எது?
6. அனுப்பும் எழுத்து எது?
7. மணக்கும் எழுத்து எது?
8. அலறும் எழுத்து எது?
9. அலட்சியப் படுத்தும் எழுத்து எது?
10. உமிழும் எழுத்து எது?

## விடைகள்.

1. ஏவறை, 2. கொட்டாவி, 3. ஐப்பசி, 4. ஐஸ்பழம், 5. வா, 6. போ, 7. பூ, 8. ஆ, 9. சீ, 10. தூ.
தனக்குப் பிடித்ததை எழுதி அனுப்பியவர் கிரிசாந் மனோரஞ்சிதராசா.

> பிறர் மகிழ்ச்சியாக இருக்க எப்போது வழி கண்டு பிடித்துக் கொடுக்கிறீர்களோ, அப்போது முதலே நீங்கள் இன்பமாக இருக்க ஆரம்பித்து விடுகின்றீர்கள்.
>
> -இங்கர்சால்-

www.tamilarangam.net

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | ழி | வா | ள | ம் | ப | சோ | ஞா | த | ப |
| ணை | ஆ | ஜ் | கு | க | ம் | ல | க | து | ணை |
| யா | த் | கை | ழி | ட் | ப | ம் | பை | ர | வ |
| டீ | த | ன் | வ | டை | ர | கு | த | ம் | கு |
| அ | ம் | டீ | த | ப | ம் | ன் | கு | ட | லை |
| சா | லை | சோ | த் | ஆ | ம | க | ன் | ர் | யா |
| பா | வ் | ழி | ப | ஞ் | ச | ல் | ஒ | மா | தி |
| ச | ளை | வா | கை | கு | ஞ் | கு | ம் | ன | கா |
| ம் | வ | ர | கி | ழி | த | ம் | ரை | கி | கு |
| பா | த | ம் | க | மே | கி | வி | க | த் | தி |

www.tamilarangam.net

# அச்சம் தவிர்



ஒரு ஊரில் துரைச்சாமி என்ற சோதிடர் இருந்தார். அவர் சொல்லுவது கூடுதலாக சரியாக நடந்து வந்தது. அவர் கனவுகளுக்கும் பலன் சொல்லுவார். ஒரு நாள் அவரே கனவு கண்டார். கனவு எல்லா மனிதர்களுக்கும் வருவது தான். ஆனாலும் அவர் கனவைக் கண்டு கவலைப்பட்டார்.

அவர் கனவில் ஒரு தேவதை வந்தது. அவரது கிராமத்தில் அரைவாசிப்பேர் நோயால் இறக்கப் போகிறார்கள் என்று சொன்னது. அவர் அதனிடம் "நீதான் தேவதையாயிற்றே! சனங்களுக்கு நோய் வராமல் தடுக்க உன்னால் முடியாதா?" என்று மன்றாட்டமாகக் கேட்டார். "நீ கேட்பதால் பத்துப்பேருக்கு வருத்தம் வரச் செய்கிறேன்." என்று சொன்னது. கனவு தானே என்று அவரால் பேசாமல் இருக்க முடியவில்லை.

www.tamilarangam.net

சனங்களிடம் மிகவும் சுத்தமாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். ஆனாலும் வெளியூருக்குச் சென்ற உள்ளூர்வாசி கொடியநோயைக் கொண்டு வந்தார். அவரின் மூலம் அந்தநோய் தொற்றிக் கொண்டது. ஆனால் கிராமத்தில் அரைவாசிப்பேர் நோயால் இறந்து விட்டார்கள். எவ்வளவோ பாதுகாப்பாக இருந்தும் அரைவாசிப்பேர் இறந்தது சோதிடரை வேதனைப் படுத்தியது.

பின்பு ஒருநாள் சோதிடரின் கனவில் தேவதை வந்தது. சோதிடர் அதனிடம் "உனக்கு இரக்கமே இல்லையா? பத்துப்பேருக்குத் தானே வருத்தம் வருவதாகக் கூறினாய். பின் ஏன் கிராமத்தில் அரைவாசிப்பேரை இறக்க வைத்தாய்?" என்று கேட்டார். தேவதை அவரிடம், "நான் பத்துப்பேருக்குத் தான் நோயைக் கொடுத்தேன். ஆனால் மிகுதிப்பேர் நோயின் பயத்தாலேயே இறந்து விட்டார்கள். நான் என்ன செய்தேன்?" என்றது.

சோதிடருக்கும் அது சொன்னது உண்மைதான் என்று புரிந்தது.

> உன்னை நீ நல்லவனாக மாற்றிக் கொண்ட பின் பூமியில் ஒரு கெட்டவன் குறைந்திருப்பதாக நீ நம்பலாம்.
>
> -கார்லைல்-

www.tamilarangam.net

# கடமை வீரர்கள்



படைத் தலைவி களைப்பில்,
 படுத்துத் தூங்கி விட்டனள்!
ஒற்றர் ஓடி வந்தனர்.
 ஒன்றாய்க் குரல் கொடுத்தனர்.

“பெரு வெள்ளம் வருகிறதே! அம்மா
 பெருவெள்ளம் வருகிறதே!
என்ன தான் செய்வது?
 எப்படித்தான் தடுப்பது?

குடிகளின் அவலநிலை
 அரசி தான் அறிந்தாரா?

www.tamilarangam.net

பதைபதைத்துக் கொண்டே
படைத்தலைவியிடம் கேட்டனர்.

"அரசிக்குச் சொல்லித்தான்
அலுத்துப் போய் விட்டேனே!
அந்தப்புரத்தில் காதலர்கள்
அரவணைப்பில் இருக்கிறார்.

அரசியின் உத்தரவு தேவையில்லை,
அல்லலுறும் மக்களைக் காப்போம்.
விரையுங்கள்!" தலைவி கூறினாள்.
விரைந்தனர் படைவீரர்!.

தத்தளிக்கும் மக்களைத்
தமது தோளில் ஏற்றினர்.
ஒருவர் கையை ஒருவர் பற்றி
உதவி பல செய்தனர்.

ஒருவர் மேலே ஒருவர் ஏறி
அணைகள் பல போட்டனர்.
ஓடி ஓடிச் செய்திகளை
உடனுக்குடன் அறிந்தனர்.


இறந்தவர்கள் போகவிட்டு
எஞ்சியோரைக் காத்தனர்.
மயக்கம் அடைந்த மக்களை
தெளிவு பெறச் செய்தனர்.

www.tamilarangam.net

வெள்ளம் வற்றி விட்டது.
விபரம் அறிந்தாள் அரசிதான்!
வெட்கித் தலை குனிந்தனள்.
வீரர்களுக்கு நன்றி சொல்லினள்.

நாற்றுப் பாத்தி தன்னிலே
நன்னன் இறைத்த தண்ணீர் தானுமே
எறும்புப் புற்றில் நுழைந்ததால்
ஏற்பட்ட விபத்துத் தானது.

புலவர்.பூங்கோதை



முழக்கால் மண்டியிட்டு வாழ்வதை விட கால்கள் நிமிர்ந்து நிற்க உயிர் விடுவது மேலானது.
எமிலியானோ ஸபாடா-


தாய் இல்லாவிடில் தெய்வ பக்தியோடு வாழவும் முடியாது. தர்ம சிந்தனையோடு சாகவும் முடியாது.
-மு.வ-

www.tamilarangam.net

# சீமை முயல்

கல்லூரியால் வீட்டுக்கு வந்த நந்தகுமார் அவசரமாகச் சாப்பிடுகின்றான். அவன் அப்படிச் சாப்பிடுவதும், சேர்ந்து படிக்கப் போகிறேன் என்று சொல்லி விட்டு, ரமணன் வீட்டுக்கு ஓடுவதும் வழக்கமாகி விட்டதொன்று. படிப்பதற்காக மட்டுமா, அவன் ரமணன் வீட்டுக்குப் போகின்றான். அவர்களின் வீட்டில் செல்லப்பிள்ளையாக இருக்கும் முயல்களைப் பார்க்க வருகிறான். வரும்போது அவைகள் விரும்பித் தின்னும் சோயா இலைகளை, களவாகப் பறித்து புத்தகப் பையினுள் வைத்துக் கொண்டு செல்கிறான்.

யாருடைய அனுமதியும் கேட்காமல், முயல் கூட்டை அணுகிச் சாப்பாடு போடுகிறான். அவனுக்கு அந்த வீட்டில் அந்த அளவுக்குச் சுதந்திரம் உண்டு. முயல்களை இமை கொட்டாமல் இரசித்துக் கொண்டிருப்பான். ரமணனின் பெரியண்ணாவோ நந்தனைப் பார்த்து இரசிப்பார். அவருக்கு



முயல்களைப் பற்றி என்ன தெரியும். ரமணனுக்கு முயலின் பாஷையே தெரியும். அதன் அசைவுகள், பார்வைகள், காதுகளை அசைவுகள், மூக்கின் சுருக்கம் எல்லாவற்றிற்கும்

www.tamilarangam.net



அர்த்தம் அவனுக்குப் புரியுமே! இதெல்லாம் அவர்களுக்கு எப்படிப் புரியும்?

ரமணன் ஆசைப்படுகிறான் என்று தானே அவனுடைய அப்பா வாங்கிக் கொடுத்தார். அவனும் தான் அப்பாவிடம் எத்தனை முறை கேட்டுப் பார்த்து விட்டான். அப்பா தான் வாங்கித் தருவதேயில்லை. "அவர்கள் இன்று வளர்ப்பார்கள். நாளை சாப்பிட்டு விடுவார்கள். நாயைச் சாப்பிட முடியுமானால் நாயைக் கூடச் சாப்பிடுவார்கள்." என்று சொல்லிவிட்டுப் போய் விடுவார் அப்பா. அம்மாவுக்கு அவன் ஆசையைப் பூர்த்தி செய்ய ஆசைதான். ஆனால் அம்மாவால் எதுவும் செய்ய முடியாதே!.

இன்றும் அப்படித்தான் முயல்களுக்கு இலைகளும் கொண்டு செல்கிறான். ரமணனின் வீட்டுக்குச் சென்ற நந்தனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. முயல்க்கூடு இருந்த இடம் வெறுமையாக இருந்தது. "முயலை யாருக்காவது கொடுத்து விட்டார்களா?". ஓடோடிச் சென்று ரமணனிடம் கேட்டான். ரமணன் சிரித்துக் கொண்டே சொன்னான், "நேற்று எங்கள் மாமா வந்தார். அவருக்கு மயலிறைச்சி நல்ல விருப்பம். அதனால் அம்மா இறைச்சி சமைத்துக் கொடுத்தார்.

www.tamilarangam.net

நந்தனுக்கு மயக்கம் வருவது போல இருந்தது. ரமணனின் வீட்டுக்காரர் யாரையுமே பார்க்கப் பிடிக்கவில்லை. அழுகைஅழுகையாக வந்தது. திரும்ப வீட்டுக்கு வந்து அம்மாவின் மடியில் விழுந்து பெரிதாக விக்கிவிக்கி அழுதான். அம்மா அவனுக்கு ஆறதல் கூறினாள். ஆனாலும் நந்தனால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அப்பா சொன்னார், "அவர்களைப் பற்றி உனக்கு முன்பே சொல்லி இருக்கின்றேனே!. முயல் வாங்கித் தர எங்களுக்கு வசதியில்லை. உனக்கு ஒரு நாய் வாங்கித் தருகிறேன். பிறந்தநாளும் உனக்கு வருகிறதே!. பரிசு நாய்க்குட்டி தான்." என்றார். அவன் அப்பாவுக்கு நன்றி சொன்னான்.

நேரம் போகவில்லை என்று சொல்பவன் சோம்பேறி. நேரம் போதவில்லை என்று சொல்பவன் உழைப்பாளி.

-யாரோ-

ஆண்டவனுக்கு இரண்டு உறைவிடங்கள் உண்டு. ஒன்று சொர்க்கம். மற்றொன்று நன்றியுள்ள மனிதனின் இதயம்.

-ஐசக் வல்ட்டன்-

www.tamilarangam.net

## தகவல் துளிகள்

-1789இல் முதன்முதலில் நீராவியில் இயங்கும் நெசவு யந்திரம். இங்கிலாந்தில் பயன்படுத்தப் பட்டது.

1885ஆண்டு ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த கார்ல்பென்ஸ் என்பவரால் கார் உருவாக்கப் பட்டது.

1924 இல் ஆங்கில வானியலாளரான எட்வின் ஹம்பிள் என்பவரால் சூரியப் பிரபஞ்சம் கண்டு பிடிக்கப் பட்டது.

உலகில் மிக வேகமான புகையிரதம் ஜப்பானில் உள்ளது. இதன் பெயர் சிக்கன்சென் அல்லது புலொட்றெயின் என்பதாகும். இதன் வேகம் மணிக்கு 195 கி.மீ ஆகும்.

1826ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜோசப் நியிபே என்பவரால் உலகின் முதல் புகைப்படம் எடுக்கப் பட்டது.

அறிந்து கொண்டதை எழுதியவர் ஷந்தியா இரவீந்திரராஜா-

www.tamilarangam.net

# சார்லி சப்ளின்





*Limelight*, 1953 Mit Claire Bloom

"லைம்லைற்" படம் பத்திரிகையாளர்களின் ஒருமித்த பாராட்டுகளைப் பெற்றது. "சார்லி வழமைக்குத் திரும்பி விட்டார்" என்றும், "பழைய சார்லியை இப்போது பார்க்கிறோம்" என்றும், பத்திரிகைகள் பாராட்டின. படத்தை ஐரோப்பிய நாடுகளில் வெளியிடச் சார்லி விரும்பினார். மனைவி, குழந்தைகளுடன் ஐரோப்பாவுக்குச் சென்று வரவும் விருப்பம் சார்லிக்கு இருந்தது.

இதற்காக அரசாங்கத்திடம் சார்லி அனுமதி கோரியிருந்தார். சார்லி செலுத்த வேண்டிய வரிப் பாக்கியைச் செலுத்திய பின்னரே அனுமதி

www.tamilarangam.net

வழங்க முடியும் என்று அரசாங்கம் அறிவித்தது. சார்லி அதிகப்படியான தொகையைச் செலுத்தியும், அரசாங்கம் அவருக்கு அனுமதி வழங்க மறுத்தது. தான் திரும்பி வர அனுமதி தர மறுத்தாலும், தான் அமெரிக்காவை விட்டுப் புறப்பட்ட விடுவேன் என்று அறிவித்த பின் சார்லிக்கு அனுமதி கிடைத்தது.

எல்லா ஆயத்தங்களும் செய்து முடித்து விட்ட சார்லி, மாளிகை போன்று தாம் கட்டிய அழகிய வீட்டை ஒருதரம் உற்று நோக்கினார். அந்த அரண்மனை போன்ற வீட்டில் எவ்வளவு மகிழ்ச்சிகள், எவ்வளவு துன்பங்கள், எத்தனை கேளிக்கைகள், கொண்டாட்டங்கள்........... சார்லி மனம் ஒரு தரம் சோகத்தில் மூழ்கியது. நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது. சிறிது நேரம் அசையாமல் நின்றார் சார்லி.

தன் பணியாட்களிடமும், நண்பர்களிடமும் விடை பெற்றுக் கொண்ட சார்லியின் மனம், தான் திரும்பவும் அந்த மாளிகைக்கு வரப் போவது இல்லை என்று அடிக்கடி கூறிக் கொண்டது. தனது சொந்த அறிவும், நடிப்பும், அதற்காகக் கிடைத்த செல்வத்தையும் தந்த அமெரிக்காவை விட்டுச் சார்லி 1952இல் குயின் எலிசபெத் என்ற

www.tamilarangam.net

கப்பலில் ஐரோப்பாவை நோக்கிப் புறப்பட்டார் சார்லி.

லைம்லைற் படம் ஐரோப்பிய நகரத்துத் திரை அரங்குகளில் பெரும் வசூலுடன் ஓடி வெற்றி வாகை சூடியது. சார்லியும் குடும்பத்தினரும் ஐரோப்பாவை வலம் வந்தனர். சுவீற்சிலாந்து நாட்டுக்குச் சென்ற சார்லி (Vevey) வேவே என்ற நகரத்தின் (Genfer) கென்வர் ஆற்றங்கரை அவரை மிகவும் கவர்ந்தது. அமைதியும் அழகும் கொண்ட அந்த இடம் சார்லியை மிகவும் கவர்ந்து விட்டது.

-தொடரும்-

## அறிவுத்துளிகள்

தாங்க முடியாத துக்கத்தில் தனியாக அழுது கொண்டிருப்பதை விட வழக்கமாகச் செய்யும் வேலைகளில் ஈடுபடுங்கள்.

புத்தகக் கடைக்குச் சென்றால் ஏதாவது புத்தகம் வாங்காமல் திரும்பாதீர்கள்.

சின்னச் சின்ன விஷயங்களில் கூட நேர்மையைக் கடைப் பிடிப்பதென்பது சின்ன விஷயம் அல்ல.

www.tamilarangam.net

உங்கள் உணர்வுகளை யாரேனும் புண் படுத்தினால் பொருட்படுத்தாதீர்கள். அதற்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள்.

குழந்தையின் கண்கள் மூலம் வாழ்க்கையின் அதிசயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.

தெரியாத விஷயத்தைத் தெரியாது என்று ஒப்புக் கொண்டு விடுங்கள்.

எல்லாம் சரியாக இருந்தால் தான் உங்களால் வேலை செய்ய முடியும் என்றால், உங்களால் வேலை செய்யவே முடியாது.

பிரச்சனையில் இருந்து விடுபடுவதை விட, அதில் மாட்டிக் கொள்ளாமல் இருப்பது புத்திசாலித்தனமானது.

சொந்த வாழ்க்கையிலும் சரி, பொது வாழ்க்கையிலும் சரி உறவுகள் சுமுகமாக இருக்க வேண்டும்.

சந்தோஷத்தின் எதிரி பொறாமை.

எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறந்து விளங்குவது தான் வாழ்க்கைக்குத் தேவையானது.

www.tamilarangam.net

Neklar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்